**செய்தி வெளியீடு எண்:020** **நாள்: 04.01.2018**

தமிழ்நாட்டில் உள்ள சமூகரீதியாக நலிவுற்ற படித்த மாணவ மாணவியர்கள் தமிழக அளவிலும், இந்திய அளவிலும் நடைபெறும் இரயில்வே பணியாளர் தேர்வு வாரியம், மத்திய அரசு பணியாளர் தேர்வு வாரியம், மத்திய வங்கிப் பணியாளர்களுக்கான தேர்வு வாரியம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆகியவற்றால் நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகளை திறம்பட எதிர்கொண்டு, தேர்ச்சி பெற்று, பணி நியமனம் செய்யப்படுவதை கருத்தில் கொண்டு, போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையத்தினை சென்னையில் துவக்குவதற்கு முடிவு செய்து அதற்கென ரூ. 1.53 கோடி நிதியை 2017–18ம் ஆண்டில் ஒதுக்கீடு செய்தும் அதன் பின்னர் ஆண்டு தோறும் ரூ.1.25 கோடி நிதியை தொடரும் செலவினமாகவும் ஒதுக்கீடு செய்து கடந்த 15.09.2017 அன்று தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இந்தப் பயிற்சி மையத்தின் மூலம் ஒவ்வொரு மூன்று மாதத்திற்கும் 500 நபர்கள் என்ற வீதத்தில் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக, முறையான பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 2,000 பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

இந்தப் பயிற்சி மையம் சென்னையில் பழைய வண்ணாரப்பேட்டையில் உள்ள சர் தியாகராயா கல்லூரியில் 04.01.2018 (வியாழக்கிழமை) முற்பகல் 11.00 மணியளவில் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு D. ஜெயக்குமார் அவர்களால் குத்துவிளக்கேற்றி துவக்கி வைக்கப்பட்டது. துவக்க விழாவில், பயிற்சி பெறவிருக்கும் மாணவ மாணவியருக்கு போட்டித் தேர்வு பயிற்சிக் கையேடுகளை வழங்கி அமைச்சர் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

விழாவில் மாண்புமிகு அமைச்சர் திரு D. ஜெயக்குமார் அவர்கள் பேசும்பொழுது, இந்தப் பயிற்சி மையத்தில் தமிழக மாணவ மாணவியருக்கு போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளும் வகையில், திறன் மிக்க பயிற்றுநர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட உள்ளது என்றும், இந்தப் பயிற்சி மையம் தற்காலிகமாக சர் தியாகராயா கல்லூரி வளாகத்தில் இயங்குவதற்கு இசைவு அளித்த கல்லூரியின் நிர்வாகக்குழுவினருக்கு நன்றி கூறியும், இந்த பயிற்சி மையத்திற்கென ஒரு நிரந்தர உண்டு, உறைவிட வசதிகளுடன் கூடிய பயிற்சி மையக் கட்டிடம் கட்டப்படும் எனவும் தெரிவித்தார். மேலும், தமிழக அரசு இந்தப் போட்டித்தேர்வுகள் பயிற்சி மையத்தில் பயிற்சி பெறும் அனைத்து பயிற்சியாளர்களுக்கும் இந்தப் பயிற்சியினை இலவசமாக வழங்குவதோடு, ஒவ்வொருவருக்கும் ரூ.1,000.00 மதிப்புள்ள போட்டித்தேர்வு பயிற்சிக்கையேடுகளையும் இலவசமாக வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். இந்தப் பயிற்சி மையத்தினைத் துவங்குவதற்கு 2017–18ம் ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடரில் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டு, உடனடியாக நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, பயிற்சி மையம் முழு வீச்சில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும், தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்கள் இந்த நல்வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு இந்திய அளவிலும், மாநில அளவிலும் நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்று நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் நற்பணி ஆற்றிட வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார். மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது இதுபோன்ற போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம் அரசு சார்பில் முழுக்க முழுக்க இலவசமாக ஏழை எளிய மாணவர்களின் எதிர்காலத்தினை கருத்தில் கொண்டு ஆரம்பிக்கப்படுவதில் தமிழ்நாடு அரசு இந்திய அளவிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது என்றும் பெருமையுடன் குறிப்பிட்டார்.

விழாவில் கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் பயிற்சித்துறைத் தலைவர் திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை செயலர், மருத்துவர்

எஸ். ஸ்வர்ணா, இ.ஆ.ப., மற்றும் கூடுதல் பயிற்சித்துறைத் தலைவர் திரு அ. சண்முக சுந்தரம், இ.ஆ.ப., ஆகியோரர் கலந்து கொண்டனர்.

சர் தியாகராயா கல்லூரியின் நிர்வாகக்குழு செயலர் திரு பி. குமாரசாமி, மற்றும் கல்லூரி முதல்வர் திரு எஸ். இரவிச்சந்திர பாபு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

போட்டித்தேர்வுகள் பயிற்சி மையத்தின் முதல்வராக முனைவர் ஜே. ஸ்டெல்லாவும், முனைவர் எஸ். நிர்மலா, மற்றும் முனைவர் ஒய். நிர்மலாதேவி ஆகியோர் உதவிப் பேராசிரியைகளாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் திறன் அடிப்படையில் சிறப்பு விரிவுரையாளர்களும் நியமனம் செய்யப்பட உள்ளனர்.

விழாவின் இறுதியில் கூடுதல் பயிற்சித் துறைத் தலைவர் நன்றி கூறினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**